

# திறவுகோல்

2055 புரட்டாசி
மாத இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# உணவு மீதான உளவியல் தாக்குதல் சரியா?

அறிவியல் ரீதியாக சூரிய வெளிச்சத்தின் ஆளுமை புரட்டாசி மாதம் குறைந்து காணப்படும் என சொல்லப்படுகிறது. மேலும், சூடாக இருந்த பூமி மெல்ல குளிர்நிலைக்கு மாறிவரும் இந்த காலகட்டத்தில் அதிக உடல் உழைப்பில் ஈடுபடாதவர்கள் மட்டும் சற்று அசைவ உணவை தவிர்ப்பது என்பது இந்தியா போன்ற பூமத்தியரேகைக்கு அருகில் உள்ள வெப்பம் மிகுந்த நாடுகளுக்குப் பொருத்தமாக இருக்கும். ஏனையோர் இதுகுறித்து கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

மனிதனுக்குச் சிறந்த உணவு சைவ உணவா, அசைவ உணவா என்னும் விவாதம் தொன்றுதொட்டு இங்கு இருந்து வருகிறது. மனித குல வரலாற்றில் ஆதிமனிதன் பழங்கள், கிழங்குகள், காய்கள், கொட்டைகள் போன்றவற்றை சாப்பிட்டுக் கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

நெருப்பின் பயனை கண்டறிந்த பின்னர்தான் மாமிச உணவுகளை உண்பவனாக மாறினான் மனிதன் என்று அறியப்படுகிறது. நாடெங்கிலும் உணவுப்பழக்கம் மனிதருக்கு மனிதர் எப்போதும் மாறுபடும் தன்மை நிறைந்ததாக இருக்கிறது. சங்க கால விருந்தோம்பலில் ஊன் சோறு விருந்தளித்தல் முக்கிய பங்கு வகித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நவீன வாழ்க்கை முறையில் மனிதன் மூளையைக் கொண்டு அதிகம் உழைப்பது அதிகரித்து விட்டது. கூடவே அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கருவிகளும் முறைகளும் பழைய உடல் உழைப்பை எளிதாக்கி விட்டன. இந்த நிலையில் அதிக கொழுப்புச்சத்து நிறைந்த அசைவ உணவு வகைகளை பெருமளவு நுகர்வது என்பது உடலுக்குக் கேடு தரும் ஒன்றாகும்.

அதேவேளையில், அதிகப்படியாக உடம்பில் தேங்கும் கொழுப்பைக் குறைக்கவல்ல போதுமான உடல் உழைப்பும் உடற்பயிற்சியும் தொடர்ந்து விடாமல் மேற்கொள்ளும் நபர்கள் அசைவ உணவு வகைகளை வழக்கம் போல் எடுத்துக் கொள்வதில் தவறொன்றும் இல்லை என்பது பல்வேறு உணவியல் நிபுணர்களின் அறிவுரையாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அசைவ உணவு வகைகளில் புரதச் சத்து அதிகம் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. உடலின் இயக்கம் சீராக நடைபெறுவதற்கு புரதத்தின் பங்களிப்பு இன்றியமையாதது. விலங்குகளில் உள்ள புரதங்களில் அனைத்து விதமான அமினோ அமிலங்களும் இருப்பதால் அவை உடலுக்கு முழுமையான ஊட்டச்சத்துக்கள் கிடைப்பதை உறுதி செய்கின்றன.

ஆனால் தாவரங்களில் இருந்து கிடைக்கும் புரதங்களில் அவற்றின் அளவு குறைவாகவே இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

மனித உடலில் புரத பற்றாக்குறை ஏற்படும்போது உடல் பலவீனம், கவனக்குறைவு போன்ற பிரச்சினைகளும் வளர்ச்சி தடைபடுதல் மற்றும் வளர்சிதை மாற்றமும் பாதிப்புக்கு உள்ளாவதாகக் காரணங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. ஆதலால், உடலுக்கு தேவையான புரதம் கிடைப்பதற்கு அசைவ உணவு சாப்பிடுவது அவசியமானது என்று வலியுறுத்தப்படுகிறது.

பொதுவாகவே, உணவுப் பழக்கவழக்கத்தில் யாரையும் கட்டுப்படுத்துவதும் கட்டாயப்படுத்துவதும் நல்லதல்ல. அதுபோல் மற்றவர்களின் உணவுப் பழக்கவழக்கத்தை இழிவுபடுத்தும் நோக்கும் போக்கும் மிகவும் கண்டிக்கத்தக்கது.

அவரவர் உடலுக்கு ஊறுவிளைவிக்காத உகந்ததை விருப்ப உணவாக எடுத்துக் கொள்வது தவறில்லை. இதே காலகட்டத்தில் புரட்டாசி விரதம் கடைபிடிக்காதோர் வழக்கம் போல் எடுத்துக் கொள்ளும் அசைவ உணவுகளால் பல்வேறு வழக்கத்திற்கு மாறான சிரமங்களை எதிர்கொண்டதற்கு போதுமான புள்ளிவிவரங்கள் இங்கு எதுவுமில்லை.

சைவ உணவையே உட்கொள்ள வேண்டும் என்பது தனிமனித உணவு சுதந்திரத்தின் மீது தொடுக்கப்படும் நவநாகரிக வன்முறைகளுள் ஒன்றான உணவியல் மீதான உளவியல் தாக்குதலாகக் கருதப்படுகிறது. குறிப்பாக நால்வருணத்தைக் கட்டாயம் கடைப்பிடிக்க வலியுறுத்தும் சனாதன தர்மம் மற்றும் பார்ப்பனிய அடிப்படையிலான பாசிச ஆட்சியில் மாட்டுக் கறி வைத்திருக்கும் மற்றும் உண்ணும் வேற்று மத அப்பாவி மனிதர்கள் இந்துத்துவ நாசகார கும்பலால் மிருகவதை சித்திரவதைக்கு ஆளாகுவதும் கும்பல் வன்முறை கொலை நிகழ்த்தப்படுவதும் தற்போது மலிந்து வருவது வேதனைக்குரியது.

அதேவேளையில், உலகளவில் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு அளப்பரியது என்று ஒரு புள்ளிவிவரம் தெரிவிப்பதை எளிதில் கடந்து விட முடியாது. ஆக, உணவு அரசியல் வழியாக மக்களிடையே தொடர்ந்து பிளவையும் பாதிப்பையும் அதனூடாக பொதுமக்களின் கவனத்தைத் திசை திருப்பி தமக்கான ஆதாயங்களை முழுமையாக அனுபவித்துக் கொண்டிருக்கும் கொடிய மனிதர்களின் நச்சுச் சிந்தனைக்கு இரையாகிய உணவில் பாகுபாடு காட்டாமல் வாழ்ந்து வந்த மனிதக் கூட்டம் சிதறுண்டு கிடப்பது எண்ணத்தக்கது.

வார நாள்களில் வார விடுமுறை நாள்களில் முதல் நாளான சனிக்கிழமை அன்று

அதிகாலையில் உச்சி முதல் உள்ளங்கால் முடிய நல்லெண்ணெய் குளியலும் அதனைத் தொடர்ந்து கட்டாயம் மாமிச உணவும் உட்கொண்டு குடும்பத்துடன் மகிழ்ச்சியும் மனநிறைவும் கொண்டு வாழ்ந்திருந்த தமிழ்ச் சமூகம் ஆரிய, பார்ப்பனீய கலாச்சார வலைக்குள் அகப்பட்டு எளிய மனிதன் குகன் அன்போடு பரிமாறிய மீன் உணவை முகம் சுளிக்காமல் உட்கொண்ட இராம அவதாரத்தின் மூலக் கடவுள் உறைந்திருக்கும் திருமலைத் திருப்பதியை அருகனையும் முருகனையும் வழிபட்டு வந்தவர்கள் திடீரென புதிதாகத் தத்து எடுத்துக் கொண்ட பெருமாளுக்காக தாம் தொன்றுதொட்டு கடைபிடித்து வந்த உணவுப் பழக்கத்திற்கு ஒரேயடியாக முழுக்குப் போட்டுக் கோவிந்தா போடுவது என்பது சற்று சிந்திக்கத் தக்கதாகும்.

இந்த பண்பாட்டுச் சீரழிவை ஏற்க முடியாது. இது தான் தம் சக மனிதர் உட்கொள்ளும் உணவின் மீதான வெறுப்பையும் இழிவையும் கற்பிதம் செய்து பன்மை பூத்த மண்ணில் வெந்நீர் பாய்ச்சுகிறது.

தமிழ்நாட்டைத் தவிர இந்திய ஒன்றியத்தின் பிற பகுதிகளிலும் எண்ணற்ற உலக நாடுகளிலும் புரட்டாசி மாதத்தில் காய்கறி உணவே கடைபிடிக்கப்படுகிறது என்பதற்கு போதிய சான்றுகள் காணக்கிடைப்பதாக இல்லை.

எனவே, உண்ணும் உணவில் வலியுறுத்தப்படும் தீட்டு அரசியலும் சைவம் தவிர்த்த பிற உணவுகள் குறித்த பயமுறுத்தல்களும் அமைதியும் இணக்கமும் சகோதரத்துவமும் தழைத்தோங்கி வளர்ந்த தமிழகச் சூழலில் தவிர்க்கப்படுதல் நல்லது. என் உணவு என் உரிமை என்பது ஒவ்வொரு தனிமனிதனின் அடிப்படை பிறப்புரிமை ஆகும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்படுவதே சாலச்சிறந்தது.

தற்போதைய சூழலில் நாட்டையும் நாட்டு மக்களையும் மனத்தளவில் பிளவுபடுத்தும் உணவு மீதான துல்லியமான உளவியல் தாக்குதலை ஒரு பண்பட்ட சமூகத்தால் ஏற்க முடியாது. அந்தவகையில் புரட்டாசி எனும் மாதம் ஏனைய மாதங்கள் போன்று மற்றுமொரு மாதமே ஆகும். இதில் எந்தவோர் அரசியலுக்கும் துளியும் இடமில்லை.

—

எழுத்தாளர். மணி கணேசன்

## நாய் குரைத்தலில் நானும் இருக்கிறேன்

நட்சத்திரம் பறிக்க முடிகிறது
வானமாகி சிரிக்க முடிகிறது
இரைச்சல் இல்லாத காதுகள்
சுவாச சிலிர்ப்பாய் என் வாசம்
மலரும் நினைவுகளுக்கு
மூளை நரம்பின் நடனம்
இதயத்தின் வரம்புகளில்
இசை கூடிய இதழ் விரிப்பு
முகமூடியில்லாத முகத்தை
மாட்டிக் கொள்கிறேன்
தெளிந்த நன்னடைக்கருகே
திறந்திடு சீசே பொன் வீதிகள்
நாய் குரைத்தலில்
நானும் இருக்கிறேன்
நிழலோடு நீண்டு நெளியும்
உடல் இலகு
இருட்டுக்குள்ளிருந்து பார்க்கிறேன்
விடியும் வரை வெளிச்சமென
எனக்குள்ளிருந்து
இருட்டும் பார்க்கிறது....!

## விண்மீன் அறுவடை

நுட்பம் கூடிய இருளில்
வெம்மை சூழ் ஒளியும் தான்
பிறர் நுழையா
தான்தோன்றலின் மேகம்
மிருதுவான மிருகம்
மெல்ல விலகட்டும்
யாவுமென கூவும் அதன் சுவர்
அன்றைய தலைகீழ் தத்துவம்
கத்திப் பார்க்கும் சிறு பறவையென
திக்கு திசையில் மொக்கு ஞானம்
அதன் வால் அமர்ந்த
வெளி உச்சி
அசையும் வித்தைக்கு
நிலை உண்டா
நிறம் உண்டா
கிட்ட வந்த தூரம் இது
மொட்டைமாடி போதி இது
விண்மீன் அறுவடையை
வித விதமாய் செய்யும் நாளில்
தொட்ட வானம் உடையலாம்
தொடாத வானம் தொலையலாம்...!

## அருகா மனம்

இருப்பது போல
இருந்து விடுகிறேன்
நகர்வது போல
நகர்ந்தும் விடுகிறேன்
இடைவெளி
புள்ளியாகவும் இருக்கலாம்
சூடிக் கொண்ட தனிமை
கோடும் தாண்டலாம்
சொட்டும் தவிப்புகளை
கொண்ட முனைப்புகளை
மறைக்க தேவையெனில்
மாற்றி யோசித்த மர்மம்
புன்னகைக்கிறது
கிட்டத்தில் கொண்ட தீவிரம்
தீர்க்கமல்ல தேன்துளி
தூரத்தில் கொண்ட
அருகா மனம்
துரோகம் இல்லை துணை
முனைந்தால் முழுதும்
மிகுந்தால் விலகும்
இது
அகலாது அணுகாது
தீக்காயும் வித்தை...!

— கவிஜி

# நிலவொளியில் அசையும் சிலந்திவலை – நூல் விமர்சனம்

நூல்: நிலவொளியில் அசையும் சிலந்திவலை
நூலாசிரியர்: பாக்யபாரதி
நூல் விமர்சனம்: மோகன் (ஆசிரியர்)

தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த கவிஞர் பாக்யபாரதியின் "நிலவொளியில் அசையும் சிலந்திவலை" என்கிற கவிதை நூலை வாசித்தேன். ஒவ்வொரு பக்கமாக புரட்ட புரட்ட எனது சிந்தனையும் விரிவடைவது போலிருந்தது. இந்நூல் வெவ்வேறு தலைப்புகளில் மொத்தம் நாற்பத்தோரு கவிதைகளைத் தனக்குள் பத்திரப்படுத்தி வைத்துள்ளது.

முதல் கவிதையே 'இலக்கை நோக்கி ' என்கிற தலைப்பில் சிறப்பாக அமைந்துள்ளது.

கடல்தாண்டி
பறந்து சென்று
தனது குஞ்சுக்காக
இரை கொண்டு வரும்
பறவையைப்
பார்த்ததில்லையா?
சிலந்திவலையும்
தேன்கூடும் - உன்
கண்களுக்குத்
தென்படவில்லையா?

என்ற வரிகள் முயற்சியைக் கைவிட்டு, எல்லாம் முடிந்தது அவ்வளவுதான் என்று வீழ்ந்து கிடப்பவனுக்கு நம்பிக்கையைத் தந்து தொடர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயம் என்பதை உரக்க சொல்கின்றன.

நாட்டின் முதுகெழும்பு விவசாயம் தான். அப்படிப்பட்ட உயர்ந்த பணியை செய்பவர்களை நாம் எப்போதும் மதிக்க வேண்டும் என்பதை 'முதலிடம் உழவனுக்கே' என்ற கவிதையில் எடுத்துரைக்கிறார்.

குழந்தையின் கண்ணில்
தூசு விழுந்த கணம்
துடித்துப் போகும்
அன்னையைப் போலவே
கட்டிய வேட்டியின்
முனையை - தன்
உமிழ்நீரால் நனைத்து
ஒத்தடமிடும்
தந்தையின் பாசமும்
பெரிதுதான்!

இந்த கவிதை, பொதுவாக பாசத்திற்கு அன்னையை மட்டுமே அடையாளம் காட்டும் இவ்வுலகில் தந்தையின் பாசமும் அவளுக்கு இணையானதுதான் என்று அடித்துச் சொல்கிறது.

பிறப்பும் இறப்பும் ஒருமுறையே. ஆதலால் இருக்கும் வரை நல்லவராக இருக்க முயற்சி செய்யுங்கள்.

ஊனமான விழிகளுடன் உலவும் மானிடர்க்கு கண்தானம் செய்வீர் என்று அறிவுறுத்துகிறார். 'உன் ஏமாற்றத்தினால் நான் கவிஞனானேன்' என்ற கவிதையை வாசித்தபோது என்னுடைய பால்ய பருவமும், இளமைப் பருவமும் சில நிமிடங்கள் எனக்குள ஊஞ்சலாடிவிட்டு சென்றது. வாசிப்பவரின் வாழ்வியலோடு ஒத்துப்போகும் இந்த இடத்தில் நூலாசிரியர் அவரின் படைப்பில் வெற்றி பெறுகிறார்.

பணபலம்
பதவிபலம்
சாதி பலமென்று
எவ்வித பலமும்
இல்லாதவருடைய
தேவைகள்
நிறைவேற நிறைவேறதான்
நிமிரத் தொடங்கும்
சமத்துவம்...

என்ற கவிதை இன்றைய சமூகத்தின் நிலையைப் படம்பிடித்துக் காட்டும் அதே வேளையில் சமத்துவம் மலர சமூகம் இன்னும் மாற வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறது.

பொய்களும் போலிகளும் எவ்வளவுதான் ஆட்டம் போட்டாலும் உண்மையை சில காலம் அழுத்தி வைக்கலாமே தவிர அழிக்கும் ஆற்றல் அவைகளுக்கு கிடையாது என்கிற எதார்த்தத்தை, இறுதி கவிதையான 'உண்மைக்கு மரணமில்லை' என்பதில் குறிப்பிட்டிருக்கிறார். எளிய நடையில் ஆழ்ந்த கருத்துக்களைப் பதிவு செய்துள்ள கவிஞர் பாக்யபாரதி மென்மேலும் பல படைப்புகளைப் படைத்துப் புகழ் பெற வாழ்த்துகள்.


அன்புடன்,

மோகன், ஆசிரியர்,

நாமக்கல்.

நூலாசிரியர்: பாக்யபாரதி
நூலின் விலை: ரூ.120/-
வெளியீடு: மகிழினி பதிப்பகம்

**நூல் தேவைப்படுவோர்:**
**அணுகவும்: 6382441306**





த. சரண்யா ரவி
கோவை.

அவள் இன்னும் பழைய அவளை
அடிக்கடி பார்த்து நினைவுகளை
ரசித்துக் கொள்கிறாள்..!

அந்த நினைவுகள் சற்று
வித்தியாசமானவை !!!

தேநீர் வைக்கும் இடைவேளைகளில்
நுறைகளென பொங்கும்...

என்றாவது குளித்து விட்டு
கண்ணாடியை இரண்டு
நிமிடங்களுக்கு மேலாக
உபயோகப்படுத்தும் நேரங்களில்
குறும் புன்னகைகளாக...

கணினியின் விசைப்பலகையை
அழுத்தி அழுத்தி தேய்ந்த கைகளை
வாயில் வைத்து எதையாவது
யோசிக்க துவங்கும் போது திடீரென
தோன்றும் அந்த பழைய நினைவுகள்
அவ்வளவு பலமானவை..!

அனுதினமும் வந்து போகும்
அளவுக்கு வலிமையானவை என்பதை
அவ்வப்போது கண்களில் எட்டி
பார்க்கும் கண்ணீர் துளிகள் தான்
உறுதிப்படுத்திக் கொள்ளும்!

# நகரப்பேருந்தில்,

நெரிசல் நிறைந்த சாலைகளில்
என எங்கும்
சுற்றிதிரியும் கழுகுகளுக்கு
பயந்து ஆடைசரிசெய்து
பழகியவள்
உறக்கத்திலும்
சரிசெய்கிறாள் ஆடைகளை

கோவம் புதைந்த
ஒரு மனிதனை கடக்க நேரின்
சிறிது புன்னகையை
உதிர்த்துவிட்டு போங்கள்
அழுக்கான கைகளை கூட
அழகாக்கும் பூக்கள்

அந்த பிரம்மாண்ட மேடையின்
அரங்கம் எங்கும்
சிரிப்பின் அதிர்வலைகள்
குழந்தைகள் முதல்
பெரியவர் வரை
மகிழ்ச்சியில் சிரிக்கவைத்த
கோமாளியின் முகத்தில்
கடைசிவரை பூக்கவே இல்லை
புன்னகைப்பூக்கள்

பகிர்ந்து கொள்ளப்படாத
காதலுக்கு முடிவென்பது ஏது
பாலைவன வெயிலுக்கு
இதமளிக்கும் ஓடைபோல
அந்த நினைவுகள்
துளிர்விடும் சமயங்களில்
மனசெல்லாம் மார்கழி தான்

பேறுகால
அறுவைசிகிச்சையின்
அடையாளம்போல
வயல்வெளிகளை
பிளந்து செல்கிறது
நான்குவழிச்சாலை
சுகபிரசவத்திற்கு
வழியிருந்தும்

காய்ச்சலால் சுருண்டு
கிடந்த என் குழந்தைக்கு
மருந்து அளித்து திரும்புகையில்
முந்தானையை இழுக்குறாள்
தனது பொம்மைக்கும்
தரவேண்டி என்னுள் இருந்த
அதே கவலையோடு

என் ஞாபக அடுக்குகளில் எல்லாம் நீ!

நிறைமாத கர்ப்பிணி ஒருத்தி என்னை
கடந்து
செல்லுகிறாள்
அனிசையாய் வந்து போகிறது
வளர்ச்சி குறைபாட்டால்
கலைக்கப்பட்ட என் முதல் கரு!

எங்கேனும் குழந்தை அழும்
சத்தம் கேட்கையில் நினைத்து
கொள்கிறேன்
என் குழந்தையின் அழுகையும்
எப்படி இருக்கும்மென!

பூங்காவில் விளையாடும் குழந்தை
ஒன்று தவறி விழுகிறது
தாங்கிபிடிக்கையில் எட்டிப்பார்கிறது

என் குழந்தையின் நினைவு!

உறவுகளின் புறம்பேசல்களை கேட்க
நேர்கையில்
கண்ணீரோடு கலந்து வருகிறது
கலைந்துபோன என் கரு!

கூடல் முடிந்து ஆடை திருத்தும்
நேரம் எல்லாம் தங்கிவிடுமா !
என்ற ஏக்கத்தோடு முடிகிறது அந்த
ஏகாந்த பொழுது!

வளர்ச்சியில்லை என்று கலைக்கப்பட்ட
கரு இன்று
வளர்ந்து விட்டது என் ஞாபக
அடுக்குகளில்!

அங்கீகரிக்கப்படாத
அன்புக்குச் சொந்தக்கார்கள்!

அப்பா எனும்
மூன்றொழுத்து மந்திரத்தை
உச்சரிக்கும் உதடுகளுக்கு
இங்கு பஞ்சமே!

ஹிட்லரின் முகமூடியில்
உலா வரும் அப்பாக்களுக்குள் இருக்கும்
சார்லி சாப்லீனைக் கண்டுபிடிக்க
பேரக் குழந்தைகளால் மட்டுமே
முடியும்!

திருவாய் மலராது
திருமதிக்கு உத்தரவிடும்
மாயக்காரரர்களுக்கு
பொதுவான பெயருண்டு வில்லன் என்று!

ஓடிஓடி உழைப்பவர்களை
ஒப்பனையோடு பார்க்கலாம்
கல்யாண புகைபடத்தில் !

பசிக்கு உணவு, பாந்தமாக
ஒரு வண்டி, சில நிமிட செய்திகள்,
பதினொரு மணி தேநீர்,
ஆண்டுக்கொரு சட்டை
இவையே
அவர்களின் அதிகபட்ச தேவையாக
இருப்பினும்
அயராது ஓடுபவர்கள் !

தேடிச்சேர்த்த சொத்தையெல்லாம்
பங்கு பாகம் பிரிப்பவர்கள்
மறந்தும் வெளியிடுவதில்லை
வட்டிக்கடன் போடும் குட்டிகளை
பற்றி!

அப்படி என்ன செய்துவிடமுடியும்
அவனால்
என் இரவுகளை
அவன் நினைவுகளால்
நிரப்புவதை தவிர

அப்படி என்ன செய்துவிட முடியும்
அவனால்
என் தனிமையினை
அவன் காதலையென்னி
கழிக்க வைப்பதை தவிர

அப்படி என்ன செய்துவிட முடியும்
அவனால்
என் சுயநினைவோடே

அவனின் காதலுக்கு
பைத்தியமாக மாற்றுவதைத்தவிர

அப்படி என்ன செய்துவிட முடியும்
அவனால்
என் புலம்பல்களில் எல்லாம்
அவன் மீதான என் காதலை
கொட்டி தீர்க்க வைப்பதை தவிர

அப்படி என்ன செய்துவிட முடியும்
அவனால்
எங்கோ ஒலிக்கும்
காதல் பாடல்களின் வரிகளை
அவனோடு ஒப்பீடு செய்ய
வைப்பதைத்தவிர

அப்படி என்ன செய்துவிட முடியும்
அவனால்
அவன் பெயர் தாங்கிய
வணிக பதாகைகளை
நின்று ரசிக்கவைப்பதையும்
அவன் பெயர் கொண்ட குழந்தைகளை
கொஞ்சி தீர்ப்பதையும் தவிர

அப்படி என்ன செய்துவிட முடியும்
அவனால்
இப்படி எதையாவது
பிதற்றவைப்பதை தவிர

## அவனின் மாதாந்திர வலிகள்

ஆஜானுபாகுவான
அவனின் வெளித்தோற்றமோ
ஊர்காவலிருக்கும் ஐயனாராக இருக்க
அவனோ கையறு அற்றநிலையில்
கதறி கொண்டிருக்கிறான் உள்ளுக்குள்

அந்த வானுக்கும்
இந்த ஆணுக்கும்
மாதத்தின் பாதிநாட்கள்
தேய்பிறையாகவே கழிகின்றது

பதினொரு மணியை எட்டிய
கடிகார முள்ளைக்கூட
எள்ளி நகையாடும் அவனை
வழக்கமாக இந்நேரம்
தேநீரும், புகையிலை சகிதமாக
வலம்வருபவன் வேலையை சாக்குகாட்டி
போக்கு காட்டுகிறான்
பதினொரு மணிக்கு டீக்கு

உணவு இடைவேளையை
நீரால் நிரப்புபவன்
மறந்தும் நினைப்பதில்லை
புன்பட்ட மனதை புகையிட்டு ஆத்த

வறுமைக்கு வாக்கப்பட்டு பல் இளிக்கும்
மணிப்பர்சை
தடவியபடியே
யோசிக்கிறான்
இன்று வாங்கித்தருவதாக
மகளிடம் அளித்த வாக்குறுதி
பட்டியலை

ஒன்றையாவது நிறைவேற்றதான்
துடிக்கிறது அவனின்
தந்தை பாசம் ஏது செய்ய
அவனின் இந்த மாதாந்திர வலியை விட

கொடிது
வலிக்காதது போல நடிப்பது தான்

நிறைமாத நிலவாய்
மணிப்பர்ஸ் நிறையும் வரை
பொறுத்துக் கொள்ளாதான் வேண்டும்
உதிரம் கசியாத அந்த மூன்று
நாட்களை...

## முரண்பட்ட பழக்கம்

அவள் அப்படி தான்
பழக்கப்படுத்த பட்டிருந்தாள்
எந்த ஒரு சுபநிகழ்வுக்கும்
முன் வரிசையில் அமராதபடிக்கு
மலர்சூடும் உரிமையற்றவளாக
உடைகளிலும் கட்டுப்பாட்டுடன்
திருட்டு பூனைபோல
சாலைகளில் பதுங்கி நடக்க
இயற்கை தேவைகளை கூட
கொலைகுற்றமென கருதிட
வட்டமிட்டும் கழுகுகளின்
நகங்களுக்கு அகப்படாது ஓட
சுயபட்சாதாபத்துடனே
ஒதுங்கி ஒடுங்கி வாழவேண்டியே
பழக்கப்பட்டிருந்தாள் அவள்
குழந்தைகளை காரணம் காட்டியே
அவர்களும் இதை
பழக்கப்படுத்தினர் அவளுக்கு
அவளைபோன்றே துணையிலந்த
அந்த நடுத்தரவயதுடையவனுக்கோ
நடந்தது திருமணம் அவள் வயதொத்த
தோழி ஒருத்தியுடன்
அதே குழந்தையை காரணம் காட்டி

## பருவக்கோளாறு

நீண்ட தொடர் வண்டியின்
எதிர்எதிர் இருக்கையில்
நானும் அவனும்!

எதார்த்தமான இரு விழி
சந்திப்பை எதிர்நோக்கி
ஏங்கித்தவித்தது மனது!

நிறுத்தம் அறியாது
விருத்தம் பாடும் இதயம்
போட்டி போட்டது தொடரியோடு

பெயர் கேட்க தவிக்கையிலே
ஆபத்பாந்தனாய் அவதரித்தார்
கடவுச்சீட்டு பரிசோதகரும்

ஒருவர் பெயரை ஒருவர்
ஓராயிரம் முறையேனும்
உச்சரித்திருப்போம் உதடுபிரியாது

பேச வேண்டி எடுத்த
பிரயத்தனங்கள் எல்லாம்
காற்றில் கரைந்திட
புன்னகை மட்டுமே
பகிரப்பட்டது

காலாவதி தேதி நெருக்கும்
பொருட்களை விற்க காட்டும்
மும்பரத்தோடு
எடுக்கப்பட்ட முயற்சிகள்
உதவாதுபோக

அதோ வந்தது அந்த
நிறுத்தம் தொடரிக்கு
மட்டுமல்ல எங்களின்

பருவக்கோளாறுக்கும்

## அப்பாவின் காலணிகள்

கண்ணாடி சாரளத்துக்குள்
மினுமினுக்கும்
பிரபலமான காலணிகளுக்கு
மத்தியில் தேடித்திரிகின்றன
அந்த ஒரு ஜோடி கண்கள்
அதன் சல்லடையிடும்
தேடுதலில் சிக்குண்டது
தேவதையின் படம்பொறித்த
வண்ணமயமான காலணிகள்
விலைகூட கேட்கப்படாமல்
வாங்கப்பட்ட காலணியோடு
வாயிலில் தேடுகிறார் அப்பா
மரணத்தின் விளிம்பில் தவிக்கும்
தன் காலணிகளை...

—

ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்,
தென்காசி.

---

குழந்தைகள்
கண்ணாடிகளாக
மாறி விடுகிறார்கள்
அவர்களின் முன்
யார் வந்து நின்றாலும்
குழந்தைகளாக
மாறி விடுகிறார்கள்!!!

எங்கிருந்தோ
வந்து விழுகின்ற
முதல் வரியைப் பிடித்துக் கொண்டு
நீளுகின்ற
ஒரு கவிதையைப் போல்
என் வாழ்வும்
நீளுகிறது
உன்னைப் பிடித்துக் கொண்டு!!!

மகிழுந்தின் கண்ணாடிகளை
மேலே ஏற்றிக் கொண்டு
கிளம்பும் போது
எப்படியோ ஏறி அமர்ந்து கொண்ட
ஒரு பட்டாம்பூச்சி
உள்ளே சிறகடித்துக் கொண்டிருந்தது
வெகு தூர பயணத்தில்
வழித்துணையென
அழைத்துப் போகத் தோன்றியது
எனினும் மனம் திறந்து
வெளியில் அனுப்பினேன்
இந்த பட்டாம்பூச்சியின்
வருகைக்காக
ஏதேனுமொரு மலர்
காத்திருக்கலாம் என்று!!!

- கி. கவியரசன்,
செங்கம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

# பூட்டைத் திற!

கண்ணில் தெரியுது வானம் + மடமை
காரிருள் நீக்குவதே மானம் + அடடா
மண்ணில் உள்ளதை
மதித்து நடந்தால்
விண்ணில் வானவில் தோன்றும் + அதை
விளங்கிக் கொள்ள வேண்டும்!

தெருவில் வாழ்க்கை கிடக்கு + நீ
தீக்குச்சி போன்ற கிடங்கு + உன்
உருவில் இருக்கும்
உணர்வை எல்லாம்
கருவாய் ஆக்கிட தொடங்கு + நீ
கனலாய் பகையை அடக்கு!

மனத்தில் தப்புக் கணக்கு + அதனால்
வாழ்வில் நிறையப் பிணக்கு + நற்
குணத்தை நெஞ்சில்
தாங்கிக் கொண்டால்
நமக்கு இல்லை ஆமணக்கு + நீ
நட.. நட.. பாதை உனக்கு!

சிறகை கோதும் கிளிகள் + வாழ்க்கை
சிக்கல் தந்திடும் வலிகள் + உயிர்
உறவை எல்லாம்
உடன்பிறப் பெற்று
உணர்ந்தால் இல்லை பலிகள்! + நம்
உள்ளத்தில் தோன்றும் ஒளிகள்!

நாட்டில் நிறைய கன்னக்கோல் + அதை
நம்பும் மக்கள் செங்கோல் + இங்கே
நடக்கும் அனைத்தையும்
நமக்குச் சொல்லி
நம்பிக்கை தந்திடும் எழுதுகோல் + அது
நம்மனப் பூட்டின் திறவுகோல்!

—

புதுவைத் தமிழ்நெஞ்சன்

---

# மதம்

மதத்தின் பெயரால் தினந்தோறும்
மரண ஓலம் என்றாலும் மரணமில்லை
மதங்களுக்கு

மதங்களின் மண்டல மாநாடு சாதிகளின்
தலைமையில் மனிதாபிமானம் அங்கே
விற்பனைக்கு

மதங்கள் சிலருக்கு தொழில் ஆனதால்
மரணம் பலபேருக்கு வேலைவாய்ப்பாய்

மதங்களின் மேலாடையில் கிழிசல்களாய்
சாதிவெறி இங்கே ஆடை
அவிழ்க்கப்பட்டு
அம்மணமாய் மனிதம்

மதங்கள் இன்று மரணத்தின்
முகவரியிட்டு
பிணங்களின் வெளியீடாக
தடுப்பாரில்லை தவிக்குது மனசு.

—

ரா. பிரேம் சுரேஷ்,
கோத்தகிரி.

# குறுங்கவிதை

நிறைநிலவு ஆழ்கடல்
யாழிசைத்து முடிக்கும் பாணர்
வலை முழுவதும் மீன்கள்

மரத்திலேறும் எறும்புகள் வரிசை
கொத்தித் தின்னும் பறவை
வழியில் விழும் கிளை

கோடைகால முடிவு
ஆணிகள் அறைந்த மரம்
வசந்தகாலத்தில் மலர்கிறது

## வெள்ளம் வடிந்த காலை

மாச்சில்லு வாங்கும் சிறுவன்
கால் வருடும் தாய்நாய்...

வேனிற்கால பாலை
வீசி அடங்கும் மணற்புயல்
மீண்டும் பயணிக்கும் ஒட்டகம்

—
**ஸ்ரீவி. முத்துவேல்,**
துபாய்.



## உணவு உண்ணாத

நாட்கள் உண்டு
கவிதையெழுதாத
காலங்களும் உண்டு,
பூக்களை ரசிக்காத
நேரமும் உண்டு,
வலியில்
புதைந்துபோன கனவும்
உண்டு,
நிலவை தெருவிளக்கென
பார்த்ததும் உண்டு,
மழையை மழையென
உணராத நொடிகளும் உண்டு,
நீ தந்த வலியை
வலியாய் உணராத
இந்த வாழ்க்கையும் இப்போது
என்னிடமுண்டு!

— **மு. முபாரக்,**
திருச்சி.





**திவ்ய தர்சினி**
குறிஞ்சிப்பாடி

# கவிதை யென்பது யாதெனில்...

கற்பனைத் துளைத்து, நற்றமிழ் நுழைத்து
கற்றலும் கற்பித்தலும் கருவூலமாய்
தழைத்து
கற்சிற்பமும் கலையாக்கி
கருப்பொருளை நிலையாக்கி
கற்க வேண்டிய மறைபொருளே கவிதை!

## சுட்டப் பழத்தினைக் கண்டேன்...

சுட்டது யாரெனக் கண்டேன்...
சுட்டதோ சுற்றும் சூரியனே!
பட்டதோ கனி பேரீச்சையே!

—



(வாழ்வியல் கவி)
சா. நாகூர் பிச்சை,
துபாய்.

---

# இன்னும் மிச்சமிருப்பவை

வறண்ட நிலத்தின்
பேராழத்திலிருந்து
உயிர்வரைப் பெருகி
வெகுவாய் முளைத்துநீளும்
தாகத்தில் துளிர்த்த நாவைப்
புணராமல் விலகிடும்
நீரற்ற முகில்களை
விடாமல் துரத்தி
கானலை முகர்ந்திட
ஆகாயம் முழுக்க
நெருங்கிக் கதறும்
பிணங்களின் கூச்சல்
பட்டினியால் ஒட்டிய வயிறு
பாடுபட்டு ஒய்ந்த
நடுங்கிடும் கைகால்
விடைபெற துடிக்கும்
விலாவினைப் போர்த்தி
இறுகிச் சூழ்ந்த
இரத்த நாளங்கள்
பள்ளத்தாக்கின் இருளெனப்
பாழடைந்த இருவிழி
சொல்லத்துவங்கும் முன்னே
சோர்ந்து நைந்திடும்
பணிந்து பழகிய
பாமர வார்த்தை
உழுதது போக
அழுதது போக
விளைந்தது போக
அளந்தது போக
இன்னும் மிச்சமருப்பவை
இடுப்புக் கோவணமும்
இரைக்காத பாறைக்கிணறும்.

## மரங்களற்ற நிழல்

அடைமழைவிட்ட காலையில்
தென்படும் சாலையெங்கும்
அருவருத்துச் சிதறிக்கிடக்கின்றன

இரவின் மெலிந்த
இரகசியங்கள் மொத்தமும்
மின்சாரப்பூக்களை வெடித்து
போர் ஓலங்களைப் புகையாய் எழுப்பி
வறுமையின் ஆறாத இரணத்தைச்
சாயம்போன பழைய ஓவியமாய்
தீட்டிட முயன்று வெறித்து நோக்கும்
பட்டினி வயிற்றின் கடுகடுத்த மிடுக்கு
கழிப்பிட மறைவுதேடி அலையும்
அதிகாரத்தின் கரங்களில்
பொரியலோ வருவலோ செய்ய
தேவைக்கும் மேலாய் திரண்டிருக்கிறது
நத்தைகளின் நட்சத்திர
மீன்களின் தழைத்துக் கொழுத்த
அருவருத்த மாமிசம்...

வாழ்தலின் பெரும்பாவத்தைத்
தலைமேல் சுமந்து
சிதைந்த சிறகுகளோடும்
மங்கிய விழிகளோடும்
சந்ததிகளின் எதிர்காலக் கனவில்
பெருந்திரளாய் சகித்து மாய்கின்றன
மரங்களற்ற நிழலில்
வைரம் பாய்ந்த தசைகள்
கால பூசைகளை தவறமால் ஏற்று
நின்றது நின்றவண்ணம்
அமர்ந்தது அமர்ந்தவண்ணம்
எவ்வித செயல்பாடுமின்றி
பிஞ்சுகளைப் பிய்த்தெரியும்
அசூரர்களின் சிறப்பு தரிசன
வழிபாட்டில் மயங்கி
அபயக்கரத்துடன்
அருள்பாலிப்பதாய் வேசமிடும்
கடவுளில்லாக் கடவுளர்கள்!

—

பொன்தெய்வா,
ஐவேலி.



---

**மலையின் மேனியில்**

வானத்தை முட்டும் வீடுகளின்
அடித்தளக் கற்கள்
நனையப் பார்க்கின்றன
வேர்களின் கண்ணீரில்

## அறத்தைப் பேசும்

பாட நூல்களுக்குள்
புதைந்திருக்கும்
வன்முறைப் புள்ளிகளே
பெரிதாகி விடுகிறது
புறத்திலும் அகத்திலும்
வஞ்சிக்கப்பட்ட வாழ்வுக்கு

## சாலையில் சிந்தியபடி

விரையும் சரக்குந்துக்குள்
பயணிக்கும் நதிக்கு
நீரை உறிஞ்சியபடி
வழியனுப்புகிறது சூரியன்

## கடலின் சத்தத்தை

மலையின் பசுமையை
அருவியின் வெண்மையை
வனத்தின் பேரமைதியை
வானத்தின் பாதுகாவலை

இயற்கையென வரையும் சிறுமிக்கு
காணுமிடமெங்கும்
குடை பிடிக்கிறது காற்று

வறண்ட பூமிக்கு
வானத்தின் அழுகை
ஏங்கிடும் வேருக்காக
வாய்க்காலின் அழுகை
காய்ந்திடும் மணலுக்காக
அலையென கடலின் அழுகை
உணவிற்காக தாவரத்தின் மீது
வெயிலின் அழுகை
மலரின் விரிதலுக்காக
பனித்துளி வீசி இரவின் அழுகை
என

எல்லா அழுகைகளும்
கருணையின்
பேரன்பெனக் கொண்டால்
தனக்கான அழுகையை
தவிர்த்து விடலாம்
மனிதா.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



# மழையே வா! மகிழ்வை தா!

சாரல் மழையே
சற்று
வேகமாக வா...
முடிந்தால்
இன்றே
கனமழையாக உருவெடு!
பள்ளிக்கு
விடுமுறை விடுவார்கள்...

நேற்று இரவு
பாட்டியின் கதையைத்
தவறவிட்டுவிட்டேன்!

பல்லாங்குழி கட்டை
வீட்டுக்குள்
பயன்பாடின்றி கிடக்கிறது!

பகல் நேரத்தில்
அப்பாவுடன்
மகிழ்ந்திருந்து
பலநாட்களாகிவிட்டது!

பொறுமையாக
பார்த்துப் பார்த்து
சமைக்கின்ற அம்மாவை வாரத்தில்
ஒருநாள் மட்டுமே
காணமுடிகிறது!

பத்தாம் வகுப்பு

படிக்கும்
அண்ணனோடு
அன்பு சண்டைகள் போட
வாய்ப்புகளே
அமைவதில்லை!

இன்னும்
எத்தனையோ ஏக்கங்கள்
எனக்குள்ளே...
நீ நினைத்தால்
எல்லாம் நிறைவேறும்
தன்னாலே...
மழையே வா! மகிழ்வை தா!

—

பாக்யபாரதி,
தருமபுரி,
கைப்பேசி: 6382441306

---

# அக்கறை

மனிதம்
கருணை
உவகை
கண்ணீர்
இவர்கள் உணர்வு ரீதியானவர்கள்

யோசிப்பு
இலக்கு நிர்ணயம்
துல்லிய திட்டமிடல்
கவனக்குவிப்பாய் செயல்
திறன் வளர்த்தல்
முடிவு எடுத்தல்
இவர்கள்
புத்தி ரீதியானவர்கள்

ஆனால்
நம்பிக்கை
நீங்கள் மட்டும்
இரண்டுமாய்...

## அதன் பெயர் தான்...

ஆறாம் அறிவின் விளைவாய்
யோசிப்பு

யோசிப்பால்
கருத்து மோதல்கள்
சரி தவறு என
விவாதங்கள்

இதை தவிர்த்து
தனி மனித விமர்சனங்கள்
சொந்த வாழ்க்கைப்பற்றிய
குற்றப்பத்திரிக்கை
என வாசிக்காமால்
இருந்தால்

அதன் பெயர்
'மனப்பக்குவம்

## அவைகள் பேசட்டும்

நம்
தனித்துவமான

தரமான
காலத்தே
செய்த செயல்களும்

புத்தியாலோ
உடம்பாலோ
பணத்தாலோ
செய்த உதவிகளும்

தவறான
புரிதலுக்கு
கிடைத்த வசை மொழிக்கு
மனப்பக்குவத்தால்
காத்த
அமைதியும்

பின்னர் நடக்க
இருப்பதை
முன்னரே
எதிர்பார்த்து
எடுத்த
முன்னெடுப்புகளும்

பேசட்டும்
பெற்றவர் வழியாய்

நம் உதட்டு வார்த்தைகள்
வேண்டாம்

## தனியே தன்னந்தனியே

தனித்திருக்கையில்
இன்றைய நாளில்

அதை ஏன் தவறாய்
செய்தாய்?
அதை ஏன் நேரத்தில்
முடிக்கவில்லை?
அதை ஏன்
முடிக்கவில்லை?
அதை ஏன் இப்படி செய்து
பிறரிடம் வசை மொழி
வாங்கி கொடுத்தாய்?

நாளைக்கு என்ன
செய்யப்போகிறாய்?
நாளைக்கும்
இன்றைய நிலை தானா?

என அடுக்கு அடுக்காய்
கோபக்கேள்விகள்
மனதிடமிருந்து
புத்திக்கு

இதனால் தானோ
தனித்திருக்கையில்
சிந்தனையில்
கவனம் என்கிறார்கள்

## ஆமா தானே?

நீண்ட யோசனைக்குப்பின்
தெளிவான திட்டம்

முயற்சிக்கும் பயிற்சிக்கும்
பின் கைவந்த திறமை

செயலுக்கு தயாராக
கடின உழைப்பு

எடுத்து கொண்ட
விஷயத்தில் ஆத்மார்த்தம்

இத்தனையும்
இருந்தாலும்

செயல்பாட்டுக்கு
காலத்திலும்
முடிவுக்கு காத்திருக்கையிலும்

உதடுகளோ
மனதுக்குள்ளோ
'கடவுளே கடவுளே'
என்று முணு முணுப்பது
மனித இயல்பு தானே....

## இவைகளும் தான்...

சூழ்நிலை புரிந்து
இயங்குவது

சொல்வதற்கு
முழுமையாய்
செவி கொடுத்து
விட்டு பதிலளிப்பது

மாற்றுக்கருத்துக்கும்
மதிப்பளிப்பது

தேவை அறிந்து
கேட்கலாமே உதவுவது

சொன்னவற்றை
செய்வது
இயலவில்லை எனில்
கெடு முன்னே
சொல்லி
திருத்தப்பட்ட

இலக்கு கொண்டு
முடிப்பது

எதிர் மனிதனின்
பிடிக்காத பேச்சை
உடல் மொழியால்
வெளிப்படுத்தாமல்
இருப்பது

பிறரின்
குறைகளை
யோசித்து
பகிராமால்
இருப்பது

உடல் சார்ந்த
விமர்சனங்களை
தவிர்ப்பது

அனுமானங்களினாவும்
தான் கொண்ட எண்ணங்களினாலும்
உண்மையற்ற
எதிர்மறை கருத்துக்களை
சொல்லாதிருப்பது

விருப்பமில்லாதவரின்
தோல்விக்கும்
வருத்ததுக்கும்
மகிழ்ச்சி
கொண்டாமால் இருப்பது

சொந்த இழப்புக்கும்
ஏமாற்றத்துக்கும்
மனவேதனைக்கும்
கடமையை பாதிக்க செய்யாமால்

இருப்பது

கொடுக்கபட்ட
அதிகாரங்கள்
நிறைவேற்ற வேண்டிய
பொறுப்புக்கு என்று
உணர்வது

இவைகளும்
சொல்லிக்கொள்ள
வேண்டியவை தான்

பதவியும்
படிப்பும்
அந்தஸ்தும்
வசதிகளும்
செல்வமும்
செல்வாக்கும்
மட்டும் அல்ல

## உண்டு எனினும்...

திட்டமிடலில்
தவறு

செயலில்
தோல்வி

எதிர்பார்ப்பில்
ஏமாற்றம்

இழப்பில்
வேதனை

ஏளனத்தால்
மனக்கடினம்

தொடர் முயற்சிக்கு
பிறகான இலக்கை
அடைய முடியாததால்
சோர்வு

என எல்லோர்
வாழ்க்கை பயணத்திலும்
உண்டு

ஆனால்
அதற்கான
எதிர் வினை என்பது

எல்லோர் வாழ்விலும்
ஒரே மாதிரியாய்
இருப்பதில்லை

அவை
தன் ஊக்கம்

பெற்ற அனுபவம்

சுற்றி நடப்பவைகளை
உற்று நோக்கல்

கிடைக்கின்ற
உதவி

தரப்படுகின்ற
ஆலோசனையை
பொறுத்தது

—

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



# விதிவிலக்கா என்ன?

மூச்சிறைக்கும் வேர்களின்
சுவாசத்தில் தான்
பூக்களின் வாசம் என்பதை
பூக்கள் அறிவதில்லை

மயிர்க்கொட்டியின் தியாகத்தை
பட்டாம்பூச்சிகள் நினைவு
வைத்திருப்பதில்லை

வீழ்ந்த இலைகள்
மீண்டும் வாழ்ந்த மரத்தை
அடைவதில்லை

மண் தொட்ட மழைத்துளிகள்
மீளவும்
மேகந்தொட வாய்ப்பில்லை

சிறகுகள் வளர்ந்த பறவைகள்
தாய்ப்பறவையை நினைப்பதில்லை

கடலடைந்த நதியோ
மலையிடம் திரும்பிச் செல்வதில்லை

பெற்ற பிள்ளைகள் மட்டும்
விதிவிலக்கா என்ன?

## யாரைப் பாராட்டவோ

கைதட்டிக்கொண்டே இருக்கிறது
கடற்கரையில் பென்குயின்

ஆயிரம் விசனங்கள்
அமைதியாக இருக்கிறது
ஆலயம்



என்னே ஒற்றுமை
காக்காய் கடி மாம்பழம்
கோதி உண்ணும் கிளி

கடல் மேல் பறவை
பறந்து கொண்டிருக்கிறது
கடுந்தாகம்

கொத்திக் கொத்தி எழுதுகிறது
காதல் கவிதையோ?
மரத்தில் மரங்கொத்தி

சுற்றிவர சுவர்
பயமாக இருக்கிறது
நீளும் செவிகள்

உறவினர் வருகை
நினைவில் மீண்டும் மீண்டும்
கணவனின் இறப்பு

கறுப்பு வெள்ளை புகைப்படம்
சுமந்து வருகிறது
வண்ண நினைவுகள்

புத்தகங்கள் இல்லை
பாடங்கற்கிறேன் நாளாந்தம்
வாழ்வில்

காடழிப்பு
கொடுமையாக இருக்கிறது
கோடைகாலம்

—

*Dr. ஜலீலா முஸம்மில்,*
ஏறாவூர், இலங்கை.

# வண்ணம், வாசம் கொண்டு

வண்ணம், வாசம் கொண்டு
பலரிடம் நேசம் கொள்வதில்லை
வண்டுகள்.

/
பூக்களுக்கும்
வண்டுகளுக்கும் இடையே
ஆதி தொட்டு கூடலின்றி
ஊடலில்லை.

/
பூக்களின் மடியே கதி
என்றிருக்கும் வண்டுகளுக்கு
காதல் மயக்கம்.

/
பெண்மையின்
அச்சமின்றி, கூச்சமின்றி;
வெட்கமின்றி, நாணமின்றி;
பிறந்த மேனியாய் கிடக்கிறது
பூக்கள்.
/
வண்டுகள் தரும்
முத்தங்களைச் சேகரிக்கும்
முத்த வங்கிகள் பூக்கள்.

/
வண்டுகளின்
முத்தங்களுக்கு மறுப்பின்றி
இதழ்களைக் கொடுத்துக்கொண்டே
இருக்கிறது பூக்கள்.

/
பூ விழுந்த
கண்களிலிருந்தும் வடிகிறது
கண்ணீர்ப் பூக்கள்.

/
பறித்த பூ
என் கையிலிருந்து பறந்தது
பட்டாம்பூச்சி.

/
பூக்களின் வாசல்
திறந்திருக்கும் தருணம்
பட்டப் பகலென்றும் பாராமல்
தேனைக் களவாடுகிறது ஈக்கள்.

/
பூவைப் பிடிக்காத
வண்டும்;
வண்டை வெறுக்கின்ற
பூவும்;
ஈரேழுலோகத்திலும் இல்லை.

- கவிதைகள் ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி; 9443139353.



# எங்கே மகிழ்ச்சி..!

குழைத்து கட்டிய மண் வீட்டில்..!
நிலா தெரியும் கூரையில்...!
சிறிதாய் எரியும்..
மண்ணெண்ணெய் விளக்கில்...?

அம்மா சேலையை போர்வையாக்கி..
எதிர்காலம் கனவு கண்டு
தூங்கிப் போனது மகிழ்ச்சி...!?

அதிகாலை எழும்பி..!
நீராகாரம் பருகி...!
கலப்பை சுமந்து....!
உழவு மாட்டினை ..
ஓட்டி சென்று...?
பொழுது விடிவதற்குள்...
ஒரு மா நிலத்தை
உழுதுவிட்டது மகிழ்ச்சி...!

கொட்டும் மழையில்..
நானும்,மாடும் ...!
முழுமையாய் நனைந்தபடி...!
உழுது முடித்து...
பற்கள் கிடுகிடுக்க...
வீட்டில் இருந்து கூஜாவில்
வந்த தேநீரை குடித்தது மகிழ்ச்சி..!

உழவு முடிந்து...
அவிழ்த்துவிட்ட மாடுகள் ...
பயிரை மேயாமல்...
வரப்பின் புல்லை மட்டும்
மேய்ந்தது மகிழ்ச்சி..!

பழஞ்சோறில் எருமை
தயிர் ஊற்றி...!
வறுத்த தயிர் மிளகாயும் ..?
வறுத்த குமட்டிக்காயும்...!
எலுமிச்சை ஊறுகாயும்...!
கொண்டு வந்து கொடுக்கும்
அம்மாவின் காலை உணவை ...
பசியார உண்டது மகிழ்ச்சி...!

இரவு பத்து மணிக்கு மோட்டார்
கரண்டு வரும் என்று..
அரைமணி நேரம் முன்பே
காத்திருந்து....
கரண்டு வந்ததும்...
முதல் ஆளாய்...
பம்பு செட்டை இயக்கியது
மகிழ்ச்சி....!?

சோளக் கொள்ளையில்...
உயரே பரன் அமைத்து...!
அலுமினிய தட்டில்
சத்தம் எழுப்பி....!
குருவிகளை விரட்டியது..
மகிழ்ச்சி...!

எத்தனை நடவு பெண்கள்
வந்தாலும்...!
ஒருவனாய் நாற்று முடி..
பாவித்து நிமிர்ந்து நின்ற வேளையில்....?
முறைப் பெண்களால்...?
என்னைச் சுற்றிய நடவில்..
கேளியில் சிறைப்பட்டு...!
அபராதம் கொடுத்து..?
வெளிவந்த தருணம்..
மகிழ்ச்சி...!

மண்ணு தரையில்....

வைக்கோல் கரி சாணம் மெழுகி!
மாவு கோலம் போட்டு...
ஆடு மாடு வெளியே கட்டி..
அடுப்பில் தீ மூட்டி...
சோறு பொங்கி..
சாப்பிட்டு முடிந்து...
மீதத்தை வீட்டு நாயிக்கும்
பூனைக்கும் வைத்தது..
மகிழ்ச்சி..!

இன்று -
படிப்பும், பதவியும்
வெகுதூரம் கொண்டு வந்துவிட்டது...
இயற்கையிலிருந்தும்...!
இயல்பிலிருந்தும்....!
இன்று எல்லாமும் இருக்கிறது...!
மகிழ்ச்சியை தவிர....!?

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



**ஓவியம்:**
**மா. நிரல்யா,**
**இரண்டாம் வகுப்பு,**
**சிங்கப்பூர்.**



# குலதெய்வம் சிறுகதை – பகுதி 2

## (உண்மையை அடிப்படையாய் கொண்ட புனைவு சிறுகதை)



குலதெய்வம் என்ற இந்த சிறுகதை உண்மையை அடிப்படையாய் கொண்ட புனைவு சிறுகதை. வாழ்க்கை என்னும் புத்தகம் புதிய புதிய மனிதர்களை பாத்திரங்களாய் அறிமுகம் செய்திகொண்டே போகிறது. நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரும் ஒரு அனுபவத்தை அளித்து செல்கிறார்கள். அவ்வாறு நான் சந்தித்த ஒருவரை பின்புலமாக கொண்டு புனையப்பட்ட சிறுகதை. வாழ்க்கையில் எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாற்றம் ஒன்றையே பரிசை பெற்றாலும் விடாது தனித்து போராடுவதில் பெண்கள் எப்போதுமே போராளிகள் தான். அப்படி நான் சந்தித்த ஒரு பெண்மணியை பற்றிய கதை தான் இது.

கோமாளியாய், கேலி சித்திரமாய் தன்னை வெளிக்காட்டிக்கொண்டாலும் பெற்ற பிள்ளைகளை தன்னந்தனியாய் கரைசேர்த்த ஒற்றை ஓடம் தான் இந்த பெண்மணி. பெரும்பாலும் உண்மையை கொண்டு பின்னப்பட்டது. உங்கள் நேரத்தை செலவிட்டு இக்கதையை வாசிக்கும் அனைத்து வாசகர்களுக்கும் எனது அன்பான நன்றிகள்.

இராணிக்கு சுயநினைவு மீண்ட போது அவள் சாலையின் நடுவில் நின்று மறைவிலிருந்து வெளிப்பட தங்கம் அத்தையின் கணவரின் தூக்கி பிடித்த அரிவாளோடான கையை வலுவாக தடுத்து பிடித்துக்கொண்டு நின்றிந்தாள். அவர் மீதிருந்து மது வாசனை காலையிலேயே அவர் குடித்திருப்பதை உணர்த்தியது. ஆனால் நல்ல சுயநினைவோடு தடுமாற்றமில்லாமல் தான் நின்று கொண்டிருந்தார். இராணிக்கு பின்னால் தங்கம் அத்தை கீழே விழுந்து கிடக்க அவள் மீது மிதிவண்டி கிடந்தது. மரண பயத்தில் எழுந்து கொள்ளும் பிரஞ்சை கூட இல்லாமல் அப்படியே கிடந்தாள் தங்கம் அத்தை. இராணியை சற்றும் அங்கு எதிர்பார்க்காத தங்கம் அத்தையின் கணவர் ஏறக்குறைய நிலைகுலைந்து விட்டார். "நீ எங்கப்பா இங்க வந்தே. அவளை வெட்டி பொலி போட்டாத்தான் சரியாய் இருக்கும்" என்று கையை விடுவித்து கொள்ள முயற்சித்தார்.

பிடியை விடாமல் வலுவாக்கி கொண்டு "தயவு செய்ஞ்சு அருவாளை கீழே போடுங்க.ரெண்டு பொட்ட பிள்ளைங்க அம்மா இல்லமே அனாதையா போய்டும். நீங்க ஜெயிலுக்கு போயிடுவீங்க குடும்பமே குலைஞ்சு போய்டும்.அருவாளை கீழே போடுங்க" என்றாள் இராணி.

சாலையின் நடுவில் நடந்த இந்த கட்சியை பார்த்து பயந்து ஒரு பேருந்தும் ஒரு காரும்

சாலையின் ஓரம் ஒதுக்கி வேகத்தை கூட்டி ஒட்டிக்கொண்டு சென்றனர் . யாரும் நிறுத்தவில்லை தப்பித்து ஓட்டம் பிடிக்கும் மனநிலையில் இருந்ததை அவர்கள் வேகம் காட்டியது.

தங்கம் அத்தைக்கு அடுத்தபடியாக அதிர்ச்சியில் உறைந்தது இராணியின் அப்பா தான். என்னசெய்வதென்று தெரியாமல் ஒரு நொடி திகைத்தவர் சுதாரித்துக் கொண்டு தங்கம் அத்தையை நோக்கி "எழுந்துரிச்சி ஓடு புள்ளே வெட்ட போறான்" என்று கூக்குரலிட்டார். அவர் குரல் தான் தங்கம் அத்தையை சுயநினைவுக்கு கொண்டு வந்திருக்க வேண்டும். மிதிவண்டியை தள்ளி விட்டு எழுந்து அதை எடுத்துக்கொண்டு திரும்பி பதட்டத்தோடு வீடு நோக்கி மரண பயத்தில் மிதிக்க தொடங்கினார்.

திட்டம் தோற்றத்தில் ஏற்பட்ட எரிச்சலில் "நீ எங்கப்பா இங்க வந்தே. உன்னாலே இன்னைக்கு இவ பொழைச்சா இன்னொரு நாளு மாட்டாமலா போய்டுவா.அப்ப பாத்துக்கிறேன் இவளே. தப்பிச்சுட்டா. காத்தாயி போல வந்து காப்பாத்திட்டே இன்னிக்கு" என்று அரிவாள் கையை கீழே தாழ்த்தினார் ஏமாற்றத்தோடு

தங்கம் அத்தையை தகாத வார்த்தைகளால் பூசித்துக்கொண்டு சாலையின் எதிர்புறமாக நடந்து சாலையோரமாக இருந்த சிறு கால்வாய்க்குள் அரிவாளை வீசி எறிந்துவிட்டு பச்சை வயலுக்குள் இறங்கி நடக்கத்தொடங்கினார். அவர் போவதையே பார்த்துக்கொண்டிருந்த இராணிக்கு அப்பாவால் கடுங்கோபமான வசவுகள் காதில் விழ திரும்பி அப்பாவை நோக்கி நடந்தாள். அப்பாவை அத்தகைய கோபத்தோடு நினைவு தெரிந்த நாள் முதல் இன்று தான் பார்க்கிறாள் இராணி.

"அறிவு இருக்கா உனக்கு. என்ன புள்ளே நீ குடிச்சுட்டு கைலே அருவாளோட நிக்கிற குடிகாரன்கிட்டே போய் அருவாளை பிடுச்சுக்கிட்டு நிக்கிறே.போதையில் உன்னை வெட்டி இருந்த என்ன பண்ணுறது. மாப்பிளைக்கு யாரு பதில் சொல்லுறது. உன் மாமியாருக்கு தெரிஞ்ச அவங்க வேறே என்ன சொல்லுவாங்களே ஏன்ப்பா இப்பிடி புத்தி இல்லமே பண்ணுறே" என கோபத்தில் வார்த்தைகளை கொட்டினார்.

"பாவம்பா வெட்டி இருந்த அந்த குடும்ப உருகுலைஞ்சு போய்யருக்கும்பா. இவங்களோடவா போகும் அந்த ரெண்டு பொம்புள பிள்ளைங்க என்ன பாவம் பண்ணுச்சுங்க. கடவுளு புண்ணியத்துல அதான் ஒன்னும் நடக்கலையே கோவப்படமே வண்டியே எடுபா" என்று அதிர்ச்சியிலிருந்து விடுபட்ட ஆறுதலான பெருமூச்சோடு அப்பாவை சமாதானப்படுத்தினாள் இராணி.

இராணியின் பேச்சை கேட்டு சற்று தணிந்தவராய் "நல்லதுக்கு எங்க காலமிருக்கு உதவி செய்யப்போனா இந்த காலத்துலே உபத்திரவந்தான் கிடைக்குது. ஏதோ நம்ம கும்பிடுற

குலதெய்வந்தான் உன்னை காப்பாத்தி இருக்கு" என புலம்பிக்கொண்டே வண்டியை கிளப்பினார்.

நகரத்துக்கு சென்று ஊர் திரும்பும் வரை புலம்பிக்கொண்டிருந்த அப்பாவின் வெளிக் காட்டா பாசமும் கரிசனையும் இராணி அறிந்ததே. பதில் பேசாது புன்னகை மட்டும் பதிலாய் தந்தாள் அப்பாவுக்கு.

வீடு திரும்பிய இராணி தங்கம் அத்தை நடந்த கதை அனைத்தையும் அனைவரிடமும் சொல்லி விட்டிருந்ததை அறிந்தாள். இராணியை யாரேனும் ஒரு வார்த்தை உயர்த்தி பேசியானாலும் வெளியே போலி புன்னகை காட்டி உள்ளூர எரிச்சலடையும் மாமியார் அன்றும் அதே எரிச்சலோடு "தங்கம் அத்தை சொல்லுச்சு எல்லாத்தையும் நீ ஏன்பா குறுக்கே போனே உன் மேலே அருவா பட்டிருந்த என்ன பண்ணுறது பச்சை புள்ளே வேற இருக்கு.

அங்கே இருந்து நேரா இங்க தான் வந்துச்சு. அந்த காத்தாயி அம்மனே உன் மருமக ரூபத்துல வந்து என் உசுரை காப்பாத்தி இருக்கு இன்னிக்குன்னு சொல்லிட்டு அழுதுட்டு இப்போ தான் வீட்டுக்கு போகுது" என்று முடித்து இதை எப்படி இராணிக்கு எதிராக மகனிடம் மாற்றலாம் என்ற யோசனையில் மூழ்கினார்.

அப்பா போய் அம்மாவிடம் சொல்ல மாலையில் வந்த அம்மாவும் மாமியாருக்கு ஒத்து ஊதி அவள் பங்குக்கு இராணியை வசை பாடினாள். இராணிக்கு எரிச்சலாக வந்தது. எல்லோரும் இப்படி சுயநலமாக தான் உண்டு தன் வேலையுண்டு என பிச்சனை வந்தால் ஒதுங்கி கொள்ளவேண்டுமென்றால் எப்படி தான் இந்த சமூகம் மனிதத்தன்மையோடு இருக்கும் என மனதுக்குள் பொருமி கொண்டு கல்வி அறிவும் கிராமத்தை தாண்டி யோசிக்க தெரியாமல் இருப்பவர்கள், அதனால் தான் இப்படி பேசுகிறார்கள் என தன்னை சமாதானப்படுத்தி கொண்டாள் இராணி.அப்பா அம்மாவுக்கு இராணி மீது உள்ள பாசம், கரிசனம் தான் காரணம் என்று தெரிந்தாலும் இராணிக்கு ஏற்று கொள்ள முடியவில்லை அவர்களின் புலம்பலை.

அன்று தெரு முழுவது,ம் அதே பேச்சாக இருந்தது. இரவு தொலைபேசியில் அழைத்த கணவரிடமும் மாமியார் பக்குவமாய் யோசனையில் கண்ட முறைப்படி சொல்லி வைத்தார். இவர்கள் எல்லாம் கிராமத்து மக்கள், ஆனால் கணவன் படித்தவன், வெளிநாட்டில் வெள்ளையர்களுடன் வேலை செய்பவன், அக்கறையில் ஒருகணம் திட்டினாலும் ஒரு உயிரை காப்பாற்றியதற்கு நிச்சயம் மனமகிழ்வான் என்று உள்ளூர எண்ணினாள் இராணி. அம்மாவின் பக்குவமான பேச்சை கேட்டு ஒரு முடிவுக்கு வந்திருந்த கணவன் தொலைபேசியை வாங்கியதும் அவன் பங்குக்கு வசவுகளை வாரியிறைத்து

கோபத்துடன் இணைப்பை பாதியிலேயே துண்டித்து விட்டான். கண்களில் நீர்மல்க நின்ற இராணியை பார்த்து உதட்டோரம் யாருமாறிய வெற்றி புன்னைகை காட்டினார் இராணியின் மாமியார். வெளுத்ததெல்லாம் பால் என்ற எண்ணம் கொண்ட இராணிக்கு பசு தோல் போர்த்திய நரியாகிய அவரின் முழுமையான சொரூபம் முழுதாக தெரிய அன்று வாய்ப்பில்லை.

ஆனால் அங்கு வந்த சிறுமி வனிதாவின் கண்கள் இராணியை கண்டதும் கலங்கி நன்றி உணர்ச்சியில் கசிந்ததை கண்டாள். வனிதாவை கண்டதும் ஓடி வந்து அணைத்துக்கொண்ட இராணியின் மகளை வாரியணைத்து கொண்டு" தங்கமே உங்க அம்மா தான் எங்க அம்மா உசிரே காப்பாத்தின குலதெய்வம்" என்று முத்தமிட்டாள் கண்களில் பொங்கிய கண்ணீரை துடைத்துக்கொண்டு மௌனமாக உள்ளே சென்றாள் இராணி.

பிறகு வழக்கம் போல இராணி பணிக்கு திரும்ப நாட்கள் கடந்தன. சில வாரங்களுக்கு பிறகு பணியில் இருந்தபோது மாமியாரிடம் தொலைபேசியில் பேசியபோது தங்கம் அத்தை இந்நிகழ்வுக்கு பிறகு மிகவும் பயந்து கணவனை கண்டு ஓடி ஒளிந்து பயந்து அஞ்சி வந்ததாகவும் அறிந்தாள்.

மீண்டும் ஒருநாள் சண்டை முற்ற அன்று இரவு வாசலில் தூங்கி கொண்டிருந்த கணவன் மீது கொதிக்கும் எண்ணெய்யை தங்கம் அத்தை கொட்டிவிட்டாளென்றும், அவர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் சொன்னார். தங்கம் அத்தை தான் பணம் கொடுத்தார் மருத்துவத்திற்கு என்றும் கூடவே நீ மட்டும் அன்று தடுக்காவிட்டால் இந்த நிலை வந்திருக்காது தங்கம் அத்தை இவ்வாறு செய்திருப்பாளா என்று கேள்வி எழுப்பி ராணியின் மனதை குழம்பினார்.

இராணிக்கு பெருங்குழப்பமாக இருந்தது. எது எப்படியோ தான் அன்று செய்தது சரிதான். தன் கண் முன்னே நடக்கவிருந்த ஒரு உயிர் பலியை அல்லது ஒரு ஊனத்தை தடுத்தது சரியான செயல்தான் என மறுபடியும் தன்னை முடிந்தவரை சமாதானப்படுத்திக் கொண்டாள் இராணி .

இச்சம்பவத்திற்கு பிறகு பணிச்சுமையால் தங்கம் அத்தையை மறந்து போனாள். இரு வாரங்களுக்கு பின் மறுபடியும் மாமியாரிடம் அவசர தொலைபேசி அழைப்பு. தங்கம் அத்தையின் கணவர் தூக்கு போட்டு தற்கொலை செய்துகொண்டார் எனவும் ஆனால் உண்மையில் தங்கம் அத்தை தான் அவரை கொலை செய்து தூக்கில் தொங்கவிட்டார் எனவும் தனது துப்பறியும் கோணல் புத்தியின் கற்பனையில் நேரில் பார்த்ததுபோல் தெளிவாய் விளக்கினார். எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்ததுபோல் கடைசியாய் நீயும் ஒருவகையில் அந்த மரணத்திற்கு காரணம் தான். நீ தங்கம் அத்தை இளைய மகளுக்கு கொடுத்த சுடிதார் தாவணியில் தான் கழுத்தை நெரித்து கொன்றிருக்கிறார்கள் என்று

குண்டை தூக்கி போட்டார்.

ஏனோ தெரியவில்லை இராணி செய்யும் ஒவ்வொரு செயலையும் தவறாக சித்தரிக்கும், புரிந்துகொள்ளும் பல சமயங்களில் இராணியையே குழப்பமாக உணர வைக்கும் செயலில் அயராது ஈடுபட்டு கொண்டு வந்த மாமியார் புரியாத புதிராகவே தெரிந்தார் இராணிக்கு. காலம்தான் பல புதிர்களை அவிழ்த்திடும் சூத்திரம் கொண்டது என நினைத்துக்கொண்டு சொல்லவொணா குற்ற உணர்வும் குழப்பமும் மேலோங்கிட சோர்ந்து போனாள் இராணி.

அடுத்து அம்மாவிடம் பேசிய போது எண்ணெய் கொட்டியதால் உடம்பெல்லாம் வெந்து மருத்துவம் பார்த்தும் பழைய நிலைக்கு திரும்பமுடியதால் வலியிலும், வேதனையிலும் , முன்பு போல குடிக்க முடியவில்லை என்பதாலும்,தன்னால் இனி பயனில்லை என்ற விரக்தியாலும் தற்கொலை செய்து கொண்டார். அவருக்கு விதி முடிந்து விட்டது போய்விட்டார். ராணியை குழப்பிக் கொள்ளாதிருக்கும்படி அறிவுறுத்தினாள்.இன்னும் பத்து பேரிடம் கேட்டிருந்தால் பத்து விதமான காரணங்கள் தெரிய வந்திருக்கும். எது உண்மை என்றறிந்து தக்க நடவடிக்கை எடுக்கும் தார்மீக பொறுப்பை அருகே அமர்ந்திருக்கும் அந்த காத்தாயி அம்மனுக்கே விட்டு விடுதல் நலம்.

அதன் பிறகு மறுபடியும் ஊருக்கு சென்றபோது துக்கம் விசாரிக்க தங்கம் அத்தையின் வீட்டுக்கு சென்றபோது அவர்கள் முகத்தில் துக்கத்திற்கு பதிலாக நரகத்திலிருந்து விடுபட்ட ஆறுதலை உணர்ந்தாள் இராணி. போட்டோவில் மாலைக்கிடையில் சிரித்துக் கொண்டிருந்த தங்கம் அத்தையின் கணவரை பார்த்தபொழுது எவ்வளவு மோசமான வாழ்வை வாழ்ந்திருந்தால் அவரின் பிரிவு துக்கத்திற்கு பதிலாக நிம்மதியை அந்த குடும்பத்திற்கு கொடுத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. தங்கம் அத்தை எதையும் மாற்றி கொள்ளவில்லை தாலிக்கொடியை மட்டும் கழட்டிவிட்டு பூ போட்டு எல்லாம் வைத்து கொண்டாள். இராணிக்கும் கைப்பெண்கள் பூ,போட்டு வைக்காமல் இருப்பதில் உடன்பாடு இருந்ததில்லை.

பெண்ணாய் பிறந்து முடி என்று நினைவுக்கு தெரியும் நாள் தொட்டு பொட்டும் பூவும் பெண்ணுக்கு சொந்தம்.சொல்லப்போனால் பெரும்பாலான பெண்களுக்கு பிடித்த விடயங்கள். பெண்ணாய் பிறந்தவர்களுக்கு பிறப்புரிமை என்றே சொல்லலாம். அதை ஏன் பாதியில் வந்த கணவனுக்காக விருப்பமில்லாமல் இழக்க வேண்டும். விருப்பத்துடன் துறப்பது வேறு. அவரவர் சொந்த விருப்பத்தின் பேரில் அந்த விடயங்களை விட்டுவிடலாம். அப்படி பார்க்கையில் இயற்கையாக பூ, புடவை மீது அதீத ஆசை கொண்ட தங்கம் அத்தை கணவரின் மறைவுக்கு பின் அதை தொடர்ந்தது மற்றவர்களுக்கு மரபுமீறலாய் தெரிந்தபோதும் இராணிக்கு ஒருபோதும் ஆட்சேபனை இருக்கவில்லை. ஏற்கனவே பகடியாய் அவளை பார்க்கும் அனைவருக்கும் அவர் பேசுபொருளாக மாறிப்போனார். ஆனால் ஒருபோதும் அதற்காக அவர் வருத்தப்பட்டதாக நினைவிலில்லை.

ஆனாலும் இராணியின் மனதில் மாமியாரால் வைக்கப்பட்ட சிறு கரும்புள்ளி போன்ற குற்ற உணர்ச்சியை தடுக்க முடியவில்லை. தங்கம் அத்தையின் கணவர் இறப்புக்கு தானும் ஒரு வகையில் காரணமாக அமைத்துவிட்டோமோ என்ற நினைவு ஒரு முடிச்சாக மனதில் ஆழத்தில் ஒரு மூலையில் இருந்து வருவதை நீக்க முடியவில்லை.

காலம் இறக்கை கட்டி கொண்டு யாருக்கும் காத்திராமல் பறந்தது. குழந்தையோடு அயல்நாட்டுக்கு வந்து கணவனோடு சேர்ந்து சொந்த சோகங்களில் மூழ்கிப்போன இராணி தங்கம் அத்தையை மட்டுமல்ல ஊரில் பெரும்பாலோனரை மறந்து விட்டிருந்தாள். அவ்வப்போது அம்மா மூலம் தங்கம் அத்தை ஆலோ பிளாக் வைத்து புது வீடு கட்டியதையும் பெரியவள் அமுதாவுக்கு திருமணம் செய்து விட்டதாகவும் இளையவள் வனிதாவுக்கு மாப்பிள்ளை பார்த்து வருவதாகவும் சொல்ல கேட்டாள். எப்படியோ படிக்கவைக்காவிட்டாலும் அக்கிராமத்தின் அச்சூழ்நிலையில் அவரால் முடிந்தவரை பெண் பிள்ளைகளை கரை சேர்த்து விட்டார் என எண்ணி கொண்டாள் நிம்மதி கொண்டாள் இராணி.

ஏழு ஆண்டுகளுக்கு முந்தைய நினைவிலிருந்து மீண்ட இராணி அம்மா இன்று சொன்ன தகவலால் தனது ஆழ்மன குற்ற உணர்ச்சி முடிச்சு அவிழ்ந்து அழிந்து போய் நிம்மதி மூச்சு விட்டாள். ஆம் அன்று அவள் தடுத்திராவிட்டால் தங்கம் அத்தையின் உயிர் போயிருக்கலாம் அல்லது ஊனமாயிருக்கலாம். எது நடந்திருந்தாலும் இரண்டு பெண் பிள்ளைகளின் வாழ்க்கையையும் தங்கம் அத்தையின் கணவர் அவரை போலவே ஒரு குடிகாரனுக்கு சாராயத்துக்காக நிச்சயம் திருமணம் என்ற பெயரில் விற்றிருப்பர் என்பது நூறு சதவீதம் உறுதி.

அவர்களின் இன்றைய நிம்மதியான வாழ்வு இராணியின் செயலுக்கு காலம் கொடுத்த பதிலாக அமைந்தது. வாழ்வின் பல நிகழ்வுகளுக்கு காலத்தின் கையில் தான் விடையிருக்கிறது. காத்திருப்பவர்கள் பெற்றுக்கொள்ளலாம். தன்னை போல தன் தலைமுறை ஒருபோதும் துன்பப்படாது இருக்கும் பொருட்டு தன் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து அடுத்த தலைமுறையின் வாழ்க்கையை தொடங்கி வைக்கும் தங்கம் அத்தை போன்ற ஒவ்வொரு பெண்ணும் எளிதில் யாரும் விளங்கிக்கொள்ள முடிய குலதெய்வம் தான்

முற்றும்.

—

இளவரசி இளங்கோவன்

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.